மாலை முரசு

பக்கங்கள் 19+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 20 திங்கட்கிழமை 03.04.2025 | அதிர்வு 243

## தென்னக்கோனுக்கு விளக்கமறியல் நீடிப்பு



பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென னக்கோனை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மாத்தறை 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ட்ரம்பின் புதிய வரியால் இலங்கைக்கு ஆபத்து!

## ஆராய விசேட குழுவை நியமித்த அநுர



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள புதிய பரஸ்பர வரிகளால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து ஆழமாக ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விசேட குழுவை நியமித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் நேற்று இலங்கைப்பொருள்களுக்கு 44 வீத பரஸ்பர வரிகளை விதிப்பதாக அறிவித்துள்ளார்.

குறித்த நடவடிக்கையானது, அமெரிக்கா மீது இலங்கை விதித்த 88 சதவீத வரிகள் மற்றும் வர்த்தக தடைகளுக்கு பதிலாகவே எடுக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. 02▶

# தேர்தல் ஆட்சேபனை வழக்கு தீர்ப்பு பெரும்பாலும் நாளை

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் மீதான விசாரணையை உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் நாளைய தினத்திற்கு ஒத்திவைத்திருக்கின்றன.

புது வருடத்தை ஒட்டிய நீதிமன்றங்களின் விடுமுறை நாளையுடன் ஆரம்பிப்பதால் மேற்படி மனுக்கள் தொடர்பான உத்தரவுகளை இரண்டு நீதிமன்றங்களும் பெரும்பாலும் நாளை விடுக்கலாம் 02▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# மீளப்பெற முடியாத சமஷ்டி அதிகாரப் பகிர்வுக்கு பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

## இந்தியப் பிரதமரிடம் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தப் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு இந்தியப் பிரதமரிடம் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை இலங்கைக்கு வர இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரி இந்தியப்பிரதமருக்கான மகஜரை யாழ். இந்திய தூதரகத்தில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் இன்று கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பையும் அவர்கள் நடத்தினர்.








# இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையை தீர்க்குமாறு மோடியிடம் வலியுறுத்துங்கள்!

## கடற்றொழில் அமைச்சரிடம் வடக்கு மீனவர் பிரதிநிதிகள் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் இடையிலான விசேட சந்திப்பு இன்று மாலை தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பாரதப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினையைத் தீர்க்குமாறு வலியுறுத்தக் கோரி குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### தென்னக்கோனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றில் இன்று ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை – வெலிகம, பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்தரவை அவமதித்து சுமார் 20 நாட்கள் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த 19 ஆம் திகதி காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்துத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ட்ரம்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு, அமெரிக்காவின் வர்த்தக ஏற்றத்தாழ்வைக் கட்டுப்படுத்துவதும், அமெரிக்கத் தொழில்களை ஊக்குவிப்பதுமே இந்தப் புதிய வரிகளை விதிப்பதன் நோக்கம் என்று ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறனாதொரு பின்னணியில், இலங்கை மீது அமெரிக்கா விதித்துள்ள புதிய வரிகளின் தாக்கத்தையும் விளைவுகளையும் கண்டறியும் வகையில் ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார்.

இதன்படி, நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கை முதலீட்டு சபையின் தவிசாளர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தவிசாளர், வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, இலங்கை வர்த்தக சபையின் தலைமை பொருளாதார கொள்கை ஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, அஷ்ரப் உமர், ஷெராட் அமலீன் மற்றும் சைஃப் ஜாஃபர்ஜி ஆகியோர் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை இணக்கம் காணப்பட்ட ரிட் மனுக்கள் தொடர்பான விடயங்கள் தவிர்ந்த ஏனையவற்றின் மீதான விவாதம் உயர்நீதிமன்றத்தில் இன்று தொடர்ந்து நடைபெற்றது.

இன்று உயர்நீதிமன்றம் ஒவ்வொரு தேர்தல் ஆட்சேபனை மனுவாக எடுத்து ஆராய்ந்தது.

அதே சமயம் இந்தத் தேர்தல் ஆட்சேபனைகளுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தரப்பு கிளப்பிய பூர்வாங்க ஆட்சேபனை மீதான விசாரணையையும் உயர்நீதிமன்றம் முடித்துக் கொண்டுள்ளது. அது தொடர்பான தனது முடிவையும் நாளை உயர்நீதிமன்றம் தரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளாலேயே ஆயுதம் ஏந்தினர் வடக்கு இளைஞர்கள்!

## மீண்டும் அவ்வாறு ஏற்படக்கூடாது நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு



"பல வருடங்களாகத் தொடர்ச்சியாக இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாகவே, வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். எனவே, மீண்டும் அவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு இடம்கொடுக்காத வகையில் எமது செயற்பாடுகள் அமையவேண்டும்." – என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"போர் என்பது துரதிஷ்டவசமானது. போர் நடைபெற்றமை தொடர்பில் நான் இன்றளவிலும் கவலைப்படுகின்றேன். 'போர் வெற்றி' என்ற வார்த்தையை எமது கட்சியினர் பயன்படுத்துவதில்லை. 'போர் முடிந்த பின்னர்' என்ற வசனத்தைதான் பாவிப்போம்.

இரு இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதன்போது, அவர்கள் (புலிகள்) ஏன் போராளிகளாக மாறினார்கள் என்பது தொடர்பில் நாங்கள் ஆராய வேண்டும். இதற்கு 1976ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதிகளையும் நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும். பல வருடங்களாக தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாகத்தான் வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

எனவே, மீண்டும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருப்பது தொடர்பிலேயே தற்போது நாம் அவதானம் செலுத்த வேண்டும். ஏற்பட்ட வடுக்களை எவ்வாறு ஆற்றுவது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தச் செயற்பாடுகளை நாங்கள் ஆரம்பித்திருக்க வேண்டும். போர் வெற்றியை கொண்டாடுவதற்குப் பதிலாக, உயிரிழந்த அனைவரையும் நினைவுகூர்ந்திருக்க வேண்டும்." – என்றார்.




# சிறை செல்ல ஒருபோதும் அஞ்சேன்!

## மொட்டுக் கட்சி எம்.பி. நாமல் தெரிவிப்பு



"எனக்கு அரச மாளிகையும், சிறைச்சாலையும் ஒன்றுதான். எனவே, சிறைச்சாலைக்கு செல்வதற்கு அஞ்சமாட்டேன். தவறுகள் இருந்தால் விசாரணை நடத்துங்கள்." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"நாம் வேலைகளை செய்து ஆட்சிக்கு வந்தவர்கள், மாறாகப் பொய்யுரைத்து அரியணையேறவில்லை. ஆனால், பொய்களால் எம்மை வீழ்த்தினார்கள். மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு நாம் பொய்யுரைக்கவில்லை. அரசியல் பழிவாங்கல்களிலும் ஈடுபடவில்லை. கொள்கை அடிப்படையிலான அரசியலையே முன்னெடுத்து வருகின்றோம்.

2018ஆம் ஆண்டு நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வென்றபோது மத்திய அரசின் பலம் எம் வசம் இருக்கவில்லை. ஆனால், மத்தியில் அதிகாரம் இல்லை என நாம் திணறவில்லை. சேவைகளை உரிய வகையில் முன்னெடுத்தோம்.

ஜனாதிபதி அநுர தற்போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் போல் செயல்படுகின்றார். எனக்குச் சிறைக்கு செல்வது பிரச்சினை இல்லை. சிறைச்சாலையும் ஒன்றுதான், அரச மாளிகையும் ஒன்றுதான். எம் மீது சேறுபூசுவதால் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. பொருளாதாரமும் மேம்படப் போவதில்லை." – என்றார்.







# 12 அணிகள் பங்கேற்ற ரிங்கோ ரி -20 லீக்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

2025 ரிங்கோ ரி -20 லீக் (மூன்றாம் பருவம்) மிகுந்த எதிர்பார்ப்புடன் திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் 12 அணிகள் பங்கேற்றன.

மேலும் இது ஒரு லீக் வடிவ கிரிக்கெட் தொடராக நடைபெற்றது.

மொத்தம் 34 லீக் போட்டிகள் நடைபெற்றன. இதில் சிறப்பாகச் செயற்பட்ட நான்கு அணிகள் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றன. இறுதிப் போட்டியில் அலெக்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் டெய்லி ஸ்ட்ரைக்கர்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் கோப்பைக்காக கடுமையாக மோதின.

இந்த விழாவுக்குத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

தனது அபாரமான ஆட்டத்தால் அலெக்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் ரிங்கோ ரி -20 லீக் 2025 சாம்பியனை வென்று சாதனை படைத்தது.



### உயர்நீதிமன்ற வழக்கையடுத்து

# பல்கலை மாணவன் சிவகஜன் மீதான விசாரணைச் செயன்முறைகள் நீக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 4ஆம் வருட சட்டத்துறை மாணவன் சி.சிவகஜனுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த வகுப்புத் தடை உத்தரவு மீளப் பெறப்பட்டிருந்த நிலையில், தற்போது விசாரணைச் செயன்முறைகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை சட்ட நியமனங்களுக்கு அப்பாற்பட்டது என்று குறிப்பிட்டு அந்த மாணவனின் தரப்பில் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்தே, அவருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை மீளப்பெறப்பட்டதுடன், அதன் தொடர்ச்சியாகத் தற்போது விசாரணைச் செயன்முறைகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மாணவனுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடையை 'தவறானது' என்று அறிவிக்கக் கோரியும், இழப்பீடு உள்ளிட்ட நிவாரணங்களைக் கோரியும் குறித்த வழக்குத் தொடரும் என்று மாணவன் சி.சிவகஜனின் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் தெரிவித்துள்ளார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ட்ரம்பின் திருக்கூத்து!

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியாக மனிதர்களையும் கடித்த கதை பற்றி பேசுவது உண்டு.

அப்படியாக இருக்கின்றது அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாக நடவடிக்கைகள்.

இதுவரை காலமும் அயல்நாடுகள், ஐரோப்பிய நாடுகள், சீனா மற்றும் பெரிய நாடுகளோடு வரிவிதிப்பு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி வந்த டிரம்ப் நிர்வாகம், இப்போது நொந்து நொடித்துப்போன இலங்கை போன்ற நாடுகள் மீதும் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது.

இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகத்தில் அமெரிக்காவிடமிருந்து அதிக அளவில் இறக்குமதியை செய்யாத நாடுகளில் இருந்து தனது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அதீத வரியை அறிவித்திருக்கிறது ட்ரம்பின் நிர்வாகம்.

அனைத்து இறக்குமதிகளுக்கும் 10 சதவீத வரியை விதித்து இருக்கும் அமெரிக்கா, டசின் கணக்கான பிற நாடுகளுக்குப் பரஸ்பர வரியை அதிகரித்து இருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவுடனான வர்த்தகத்தில் அமெரிக்க பொருள்களை அதிகம் இறக்குமதி செய்யாமல், அமெரிக்காவுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு கண்மூடித்தனமான வரி அதிகரிப்பை அமெரிக்க அறிவித்துள்ளது.

இலங்கை தனது மொத்த ஏற்றுமதியில் கால்பங்கை-25 வீதத்தை-அமெரிக்காவுக்குத்தான் அனுப்புகிறது.

இப்போது அமெரிக்கா விதித்துள்ள உயர்ந்த வரி விகிதங்களில் ஆறாவது இடத்தை இலங்கை எதிர்கொள்கின்றது.

புதிய வரி விதிப்பின்படி 49 சதவீதத்தில் கம்போடியா மிக உயர்ந்த வரியை எதிர்கொள்கிறது. அதைத் தொடர்ந்து வியட்நாம் 46 சதவீதத்திலும், இலங்கை 44 சதவீதத்திலும், சீனா 34 சதவீதத்திலும் உள்ளன. டிரம்ப் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 26 சதவீத பரஸ்பர வரியை அறிவித்திருக்கின்றார்.

எதிர்பாராத விதமான இந்த அதிரடியான அதிக வரி விகிதங்கள் நீண்டகால அமெரிக்க நட்பு நாடுகள் பலவற்றையே பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றன.

டிரம்ப் தமது இந்த நடவடிக்கையை ‘பொருளாதார சுதந்திரத்தின் பிரகடனம்’ என்று விவரிக்கின்றார். அமெரிக்காவுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வெளிநாட்டுப் போட்டியாளர்களுடன் போட்டியை சமன் செய்வதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதாக அவர் தமது இந்த அதிரடி நடவடிக்கைக்கு நியாயம் கற்பிக்கின்றார்.

இந்த விரிவான வரி விதிப்புகள், உலகின் மிகப்பெரிய நுகர்வோர் பொருளாதாரத்தைச் சுற்றி புதிய தடைகளை எழுப்புகின்றன எனவும், உலகளாவிய ஒழுங்கை வடிவமைத்த பல தசாப்த கால வர்த்தக தாராள மயமாக்கலை சிதறடிப்பனவாகவும் அமைந்துள்ளன என பொருளாதார நிபுணர்கள் விமர்சிக்கின்றனர்.

ட்ரம்பின்வரிவிதிப்புநடவடிக்கைகளினால் எழுந்துள்ள கவலைகள் ஏற்கனவே உலகெங்கிலும் உற்பத்தி நடவடிக்கைகளை மந்தப்படுத்தியுள்ள அதே நேரத்தில், விலைகள் உயரும் முன் பொருள்களை கொள்முதல் செய்ய நுகர்வோர் விரைவதால் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விற்பனையும் அதிகரித்துள்ளது.

டரம்ப் அதிரடியாக - எதேச்சாதிகாரமாக - அமெரிக்கத் தரப்புக்கே உரித்தான மேலாதிக்கக் கர்வத்தோடு - உலகின் மீது தொடுத்திருக்கும் இந்த வர்த்தகப் போர் நலிவுற்ற நாடுகளின் அப்பாவி நுகர்வோரைப் பெரிதும் பாதிக்கப் போகின்றது என்பதுதான் இதில் உள்ள பெரும் துன்பியல் துரதிர்ஷ்டமாகும்.

இந்த வரி விதிப்பு நடவடிக்கை உலகப் பொருளாதாரத்தை மெதுவாக்கும். மந்தநிலையின் அபாயத்தை அதிகரிக்கும். அதேசமயம் சராசரி அமெரிக்க குடும்பத்தின் வாழ்க்கைச் செலவுகளை ஆயிரக்கணக்கான டொலர்கள் அதிகரிக்கச் செய்யும் என்றும் கூட பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

அதிபர் ட்ரம்பின் திருக்கூத்தின் உள்நோக்கம் குறித்து சர்வதேசப் பொருளாதார நிபுணர்களே குழம்பி நிற்கின்றனர் என்பதுதான் இதில் உள்ள அடுத்த ஆச்சரியமாகும்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் நடவடிக்கை முன்னெடுப்பு தொடர்பான கலந்துரையாடல்

**(கற்பிட்டி எம். எஸ்.எம். ஸகீர்)**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் நடவடிக்கைகள் கற்பிட்டி நகரில் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன, அத்தோடு கடந்த முறை கற்பிட்டி பிரதேச சபையின் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக எது இருந்தது, கற்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக திகழ்வதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கற்பிட்டி பிரதேச சபையின் தலைமை வேட்பாளர் ஏ.ஆர். எம். முஸம்மில் தலைமையில் அவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் எஸ்.எச் எம். நியாஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளர் எம். எச். எம். ஹில்மி ஆகியோரின் பங்குபற்றினர்.

கலந்துரையாடலில் கற்பிட்டி நகரின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சியின் போராளிகளும் கலந்து கொண்டனர்.



## இலங்கைத் தமிழரசு கட்சியின் நெடுந்தீவு 11 ஆம் வட்டார அறிமுகம்

**(எஸ். நிதர்ஸன்)**

இலங்கை தமிழரசு கட்சியின் நெடுந்தீவு பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு இலங்கைத் தமிழரசு கட்சியின் நெடுந்தீவு 11 ஆம் வட்டார பகுதியில் அமைந்துள்ள தற்காலிக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நெடுந்தீவு பிரதேச சபையானது 8 வட்டார உறுப்பினர் களையும் 5 போனஸ் உறுப்பினர்கள் அடங்கலாக 13 உறுப்பினர்களையும் கொண்டது.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE



# வரப்பிரசாதங்கள், சலுகைகள் இன்றி மக்களுக்காக பொறுப்புமிக்கதொரு ஆட்சிக்காக அணி திரள்வோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு

மக்கள் ஆட்சியொன்றின் கீழ் ஊழல் இல்லாதவர்கள், மக்களுக்குப் பொறுப்புக் கூறக் கூடியவர்கள், நேர்மையான வர்கள், அனைவரையும் உள்ளீர்க்க கூடியவர்கள், நீதி நியாயத்தோடு நடக்கக் கூடியவர்களை எதிர்பார்க்கிறார்கள்.

புதிதாக ஒன்றைச் செய்யும், நாட்டுக்கு நேர்மையையும், கூறுவதை செவிமெடுக்கும், மனித நேயம் மிக்கவர்களை எதிர்பார்க்கின்றனர். சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களை நிராகரித்து, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும், திறம்பட்ட சேவையை ஆற்றுவோரை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இவ்வாறு மக்கள் எதிர்பார்க்கும் இதற்கு மிகவும் பொருத் தமான நபரை ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபைக்கு முன்னுறித்தியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் நடந்த “மகிழ்ச்சியுடன் கூடிய கொழும்பு நகருக்கு” எனும் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளர் வைத்திய கலாநிதி றுவைஸ் ஹனிபாவின் கொள்கை ஆவணத்தை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு குறிப்பிட்ட வர்த்தகக் குழுவின் மாதிரியாக நடந்து கொள்ளும் பொம்மை அரசியல் வாதிகளைக் கொண்ட அரசியல் இயக்கம் அல்ல. எனவே நாம் எமது பலவீனங்களைச் சரிசெய்து பலத்தோடு முன்னோக்கிப் பயணிப்போம். நாட்டு மக்கள் நம்பிக்கொண்டிருக்கும் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

சம்பிரதாய மாநகர சபை சேவைக்கு அப்பால் சென்று முழு மக்களுக்கும் பெறுமதி சேர்க்கும் சேவையை கொழும்பு நகருக்குப் பெற்றுத் தருவோம். சுகாதாரம், கல்வி, வீட்டு வசதிகள், மற்றும் பொது வசதிகளை புதிய தொழில்நுட்பத்துடன் திறம்பட, வேகமான சேவையை பெற்றுத் தர நடவடிக்கை எடுப்போம்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஆட்சியைக் கொண்டு வருவோம். தொழில் முயற்சியின் ஊடாக நகரை கட்டியெழுப்புவோம். ஊழல், மோசடி அல்லது திருட்டு இல்லாமல் எந்தவொரு குடிமகனும் கேள்வி கேட்கக் கூடிய, எந்தவொரு நபருக்கும் தகவல் அறியும் உரிமையை வழங்கும், குடிமக்கள் பங்கேற்பை அதிகரிக்கும், தூய் மையான ஆட்சியை முன் னெடுப்போம். மகிழ்ச்சி நிறைந்த நகரத்துக்காக அனைவரும் அணி திரள வேண்டும்.

சுதந்திரத்தின் பின்னர் கொழும்பு குறித்து மக்களின் எதிர் பார்ப்புகளும் கனவுகளும் நனவாகும் சமூக உடன்படிக்கை வைத்திய கலாநிதி றுவைஸ் ஹனிபாவின் தலைமையில் இன்று முன்வைக்கப்படுகிறது. இதன் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் உண்மையான மாற்றம் ஏற்படும்.– என்றார்.







# பழுதடைந்த பழ விற்பனை அம்பாறையில் அதிகரிப்பு!

(பாறுக் ஷிஹான்)

பழுதடைந்த பழ விற்பனை காரணமாக நுகர்வோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பழங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் இவ்வாறு பழுதடைந்த பழ வகைகள் விற்பனைகள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக வெள்ளரிப்பழம், வாழைப்பழம், மாம்பழம், திராட்சைப்பழம், கொய்யாப்பழம், பலாப்பழம், பப்பாசி, மாதுளம்பழங்கள் பழுதடைந்த நிலையிலும் பங்கஸ் தொற்று ஏற்பட்ட நிலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் நுகர்வோர்கள் சுகாதார ரீதியாக பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த காலங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி சகிலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கமைய மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் திடீர் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதுடன் திடீர் களப் பரிசோதனையின் போது ஹோட்டல்கள் உணவகம் மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடை போன்றனவும் சோதனைக்கு உட்படுத் தப்பட்டன.

ஆனால், தற்போது மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்களின் திடீர் பரிசோதனை தொய்வின் காரணமாக இவ்வாறு பழுதடைந்த பழ விற்பனை அதிகரித்தள்ளது என:று நுகர்வோர் தெரி விக்கின்றனர்.







# வீதியை விட்டு விலகி வாகனம் விபத்து; சம்மாந்துறையில் ஒருவர் காயம்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

கல்முனை அம்பாறை பிரதான வீதியில் ஆண்டிய சந்திக்கு அருகாமையில் இன்று வியாழக்கிழமை (03) அதிகாலை வேளையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, அம்பலாங்கொடை பகுதியில் இருந்து கடல் மீன்களை ஏற்றிக்கொண்டு மாளிகைக்காடு பகுதிக்கு வரும் போது, சாரதியின் தூக்கம் காரணமாக வீதியை விட்டு விலகி அருகில் உள்ள சுவரில் மோதிய வாகனம் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த சாரதி சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச இலக்கிய விருது விழாவுக்கு ஏப்ரல் 20 வரை விண்ணப்பிக்கலாம்

(வி.ரி.சகாதேவராஜா)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் அரச இலக்கிய விருது வழங்கல் தொடர்பாக இலங்கை எழுத்தாளர்களிடமும் மற்றும் நூல் வெளியீட்டாளர்களிடமும் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2025 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது வழங்கும் வைபவத்தின் பொருட்டு 2024 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட நூல்களை மதிப்பீடு செய்து விருதுகள் வழங்கப்படும்.

எழுத்தாளர்கள் இலங்கைப்பிரஜையாக இருத்தல்.

அதனடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டதும் 49 பக்கங்களுக்கு குறையாததுமான அச்சிடப்பட்ட நூலின் மூன்று பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட வேண்டிய நூல்களை 'அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச்செய்யலாம்.

நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 2025 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி ஆகும்.

அரச விருது வழங்கலுக்காக நூல்களை மதிப்பீடு செய்வதற்கு கீழ்க் காணும் பிரிவுகளை சார்ந்த தமிழ் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

சுய நாவல் இலக்கியம், சுய சிறுகதை தொகுப்பு, சுய கவிதை தொகுப்பு, சுய இளையோர் இலக்கியம், சுய பாடலாக்கத் தொகுப்பு, சுய நாடக இலக்கியம், சுய அறிவியல் புனைகதை, ஆங்கில மொழிகளில் பிரசுரமான சுய சிறுவர் இலக்கியம் (16 பக்கங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்) , சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் நூல், சுய இலக்கிய திறனாய்வு, சுய ஒலி-ஒளி படைப்பு பிரதியாக்க நூல், சுய நானாவித விடய நூல்கள், மொழிபெயர்ப்பு - நாவல், மொழிபெயர்ப்பு - சிறுகதைத் தொகுப்பு, மொழிபெயர்ப்பு - கவிதை தொகுப்பு, மொழிபெயர்ப்பு - நாடகம், மொழிபெயர்ப்பு - புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் நூல், மொழிபெயர்ப்பு - நானாவித விடய நூல்கள், மொழிபெயர்ப்பு - இளையோர் இலக்கியம், மொழிபெயர்ப்பு - சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு - இலக்கிய திறனாய்வு நூல், மொழிபெயர்ப்பு - ஒலி,ஒளி படைப்பு பிரதியாக்க நூல் நூல்கள்.

மொழிபெயர்ப்புக்கான நூல்கள் அனுப்பும் போது கட்டாயம் அவற்றின் மூலப் பிரதி சேர்த்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது குறித்த மேலதிக விபரங்களுக்கு 011-2872030 அல்லது 011-2872031 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.





# பௌத்த, இந்து மத உறவை மேம்படுத்தும் நிகழ்ச்சி நிரலை புதுவருடத்தில் ஏற்படுத்துக

## அமைச்சர் சந்திரசேகரனிடம் இந்துமத பீடம் கோரிக்கை

பௌத்த, இந்து மத உறவை மேம்படுத்தும் நிகழ்ச்சி நிரலை புதுவருடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் சந்திரசேகரனிடம் இந்துமத பீடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சித்திரை புத்தாண்டு, தமிழ் சிங்கள மற்றும் பௌத்த இந்து மக்களிடையே கொண்டாடப்படுகின்றது . இந்த புத்தாண்டு வருடம் எப்பொழுதும் தமிழ் சிங்கள மக்களிடையே உறவு பாலத்தை ஏற்படுத்தும் வண்ணமாக இவ்வருடப்பிறப்பு நிகழ்கின்றது.

இனங்களுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்தும் முகமாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக செயற்பட்டு வருகின்றார். அதேபோன்று மதங்களுக்கிடையே இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வழிவகைகளின் ஊடாக இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு இதுவும் ஒரு ஆரம்ப பணியாக அமையும்.

இந்தவகையில் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரனிடம் கொழும்பு தமிழ் சங்கத்தில் தேசமானிய விருது பெற்ற கரவெட்டி தர்மகுலசிங்கத்தின் பாராட்டு விழாவின் போது அமைச்சரிடம் பாபுசர்மா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் வண்ணம் பௌத்த, இந்து உறவை மேம்படுத்தும் வண்ணம் கலாச்சார நிகழ்வை ஏற்படுத்தி ஒரு தாய் மக்கள் உணர்வு அம்சமாக இதை ஒரு ஆரம்பமாக செய்ய வேண்டும். இது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் இன ஐக்கியத்துக்கும் முக்கியமானது என்று பாபுசர்மா வலியுறுத்திக் கூறியிருந்தார்.

## தனக்கு எதிராக முகநூல்களில் போலிப் பிரச்சாரம்

# மன்னார் பிரதேச சபையின் வேட்பாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!

(மன்னார் செய்தியாளர்)

என்னுடைய அரசியல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும் எனக்கு எதிரான இன ரீதியான பிரசாரங்களை முன்னெடுத்து என் மீது சேறு பூசும் செயல்பாட்டை மன்னார் பேசாலையைச் சேர்ந்த பிரியதர்ஷினி ரொட்ரிகோ என்னும் பெண்மணி முன்னெடுத்து வருகிறார் என்றும் மன்னார் பிரதேச சபையின் வேட்பாளர் இஸ்மாயில் முஹம்மது நிலான் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் பேசாலையைச் சேர்ந்த பிரியதர்ஷினி ரொட்ரிகோ என்னும் பெண்மணி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் முக நூல்களில் எனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும், நான் அரசியல்வாதி ஒருவரின் கீழிருந்து சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

அதேபோல் அண்மையில் முக நூல்களில் என் மீது அபாண்டங்களையும் பொய்களையும் கூறி என்னுடைய




பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி வருகிறார்.

இது தொடர்பில் நான் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவரையும், என்னையும் விசாரணைகளுக்காக பொலிஸார் அழைத்திருந்தனர்.

அவர்களின் அந்த அழைப்பை ஏற்று உரிய நேரத்துக்கு நான் சமூகமளித்திருந்தேன்.

பிரியதர்ஷினி என்கிற அந்தப் பெண் மணி அங்கு வருகை தரவில்லை.

இது தொடர்பாக பொலிஸார் என்னிடம் கூறுகையில், அந்த பெண்மணி வரவில்லை என்பதால் நீங்கள் இங்கிருந்து செல்லுமாறும், தேவை ஏற்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

அந்த வகையில் நான் பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியே வந்தேன்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நான் மன்னார் பிரதேச சபைக்கு வேட்பாளராகப் போட்டியிடுகிறேன்.

எனவே இந்த பெண்மணியின் நோக்கம் என்னவென்றால் என்னுடைய அரசியல் செயற்பாடுகளை தடுப்பதாகும். எனக்கு எதிரான இன ரீதியான பிரசாரங்களை முன்னெடுத்து என் மீது சேறு பூசும் செயல்பாட்டை இவர் செய்கிறார் என்பது புலனாகிறது.

அந்த வகையில் என் மீது இட்டுக் கட்டப்பட்டு என்னுடைய அரசியல் பாதையை தடுத்து அதன் மூலம் அவர் எதிர்பார்க்கும் இலக்கை அடைந்து கொள்ளலாம் என்று எதிர்பார்க்கிறார்.

எனவே மக்களிடம் வேண்டுவது, இவர் தொடர்பில் மிகவும் விழிப்புடன் செயற்படுங்கள். இன ரீதியான பிளவுகளுக்கு இப்படிப்பட்டவர்கள் முன் நின்று செயற்படுவதை எமது மக்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.- என்றார்.



# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது மைதானம் புனர்நிர்மாணம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக பாதிப்புள்ளாகி, பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட சாய்ந்தமருது வொலி வேரியன் பிரதேசத்தில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானம் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று (02) புதன்கிழமை அரசமைப்புப் பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தலைமையில் சீரமைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை ஆகியோரின் ஒத்துழைப்புடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, விளையாட்டு கழகங்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட இந்த நிகழ்வில், கல்முனை மாநகர பொறியியலாளர், சம்மாந்துறை பிரதேச சபை ஆணையாளர், சாய்ந்த மருது பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# மருந்தகங்களது உரிமையாளருடன் சுகாதார வைத்திய அதிகாரி சந்திப்பு!

(முகம்மட் இம்றான்)

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அஜித் தலைமையில் அலுவலக கேட்போர் கூடத்தில் கிண் ணியா மருந்தக உரிமையாளர்களுடன் நல்லெண்ண கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கிண்ணியா வாழ் பொது மக்களின் நலனுக்காக சில தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மருந்தகங்கள் பதிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தல், மருந்தக வெப்ப நிலையை முகாமைத்துவம் செய்தல், மருந்தகங்களில் தொடர்ந்து ஒரு மருந்தாளர் இருக்க வேண்டும், வைத்தியரின் மருத்துவ பற்றுச்சீட்டு இன்றி மருந்துப் பொருள்கள் விற்பனை செய்யக்கூடாது, தரமான மருந்துப் பொருள்களை விற்பனை செய்தல், எதிர்வரும் காலங்களில் சுகாதார வைத்திய அதிகாரியால் பார்வையிட்டு உறுதிப்படுத்தப்படும் போன்ற தீர்மானங்களுடன் கலந்துரையாடல் நிறைவுற்றது.





# முன்னாள் ஆயருக்கு மன்னாரில் அஞ்சலி!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

காலம் சென்ற மன்னார் மறைமாவட்டத்தின் முன்னை நாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று புதன்கிழமை (2) மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர பகுதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு முன்பாக இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் உருவச்சிலைக்கு அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் அடிகளார் மற்றும் அருட்சகோதரி, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை, சமூக சம நீதிக்காய் தமிழ் தேசிய உணர்வுடன் ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக் குரலாக பல சவால்களுக்கு மத்தியிலும் இன உணர்வுடன் இன உணர்வுக்காக அறப்பணி புரிந்தவர்.



நீண்ட காலமாய் சுகவீனமடைந்திருந்த மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை கடந்த 2021 ஆம் இயற்கை எய்தியமை குறிப்பிடத்தக்கது.



# சுய தொழில் முயற்சியாளர்களுக்கான தையல் நிலையம் திறந்து வைப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனமானத்தால் சுய தொழில் முயற்சியாளர்களின் மேம்பாட்டை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள "தையல் நிலையம்" மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டு. சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் சாமஸ்ரீ தேசமான்ய உ.உதயகாந்த் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனும், சிறப்பு அதிதிகளாக தையல் நிலையத்தை அமைப்பதற்கு பிரதான அனுசரணையாளராக திகழும் சமாரிற்றன் பேஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எஸ்.ரமணதாஸ் மற்றும் திருமதி ரமணதாஸ், மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவர் தேசபந்து முத்துக்குமார் செல்வராசா, வளர்ந்து வரும் இளம் தொழிலதிபரும் ஊடகவியலாளருமான ஜெ.பி. ஜெனார்த்தனன், சமூக செயற்பாட்டாளரும் சம்மேளனத்தின் ஆலோசகருமான இராசலிங்கம் விக்னேஸ்வரன், தேசிய தொழில் முயற்சி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் சிவகுமாரி செல்வராசா, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜசோதா ராஜசேகரன், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஏ.எல்.எஸ்.ஹய்றியா, சமூக செயற்பாட்டாளர் தேசமான்ய ஏ.எல்.எம்.மீராஸாகிப், கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் நாகேந்திரன் கோகுலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும் தையல் துறையில் ஆர்வமுள்ள சுய தொழில் முயற்சியாளர்களது தொழில் முயற்சியை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்தத் தையல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

"சுய தொழில் முயற்சியாளர்கள் வாழ்வில் ஒளியாய் மிளிர்வோம்" எனும் தொனிப்பொருளில் சுய தொழில் முயற்சியாளர்கள்வாழ்வில்ஒளியேற்றும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள "தையல் நிலையம்" மட்டக்களப்பு நகரில் உள்ள பிரதான சந்தைக்கு அருகாமையில் மாநகர சபைக்குச் சொந்தமான கடைத் தொகுதியின் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



# ஊடகவியலாளருக்கு நிதி உதவி!

(எம். எப். நவாஸ் )

ஹாஸிம் உமர் பவுண்டேசன் ஊடாக நோன்புப் பொருநாளை முன்னிட்டு அம்பாறை மாவட்ட ஊடகவியாளார் போரத்துக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு சாய்ந்தமருது தனியார் விடுதியில் போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தவிசாளர் ஏ எம். பவுருதீன், செயலாளர் சு. குமார் மற்றும் பொருளார் எம். எப். எம். நவாஸ் மற்றும் அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அல்ஹாஜ் ஹாஸிம் உமருக்கு அங்கத்தவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டு போரத்தால் நன்றி நவில்தல் கடிதம் அனுப்புவதாக ஏகமானதாகத் தீர்மானிக்கப்பட்டது.





# அமைச்சர் சந்திரசேகரனை வரவேற்கும் நிகழ்வு உடப்பில்





(உடப்பு க.மகாதேவன்)

உடப்பு இந்து ஆலய பரிபாலன சபை மற்றும் உடப்பு மீன்பிடி சங்கங்கள் ஏற்பாடு செய்த, கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனை வரவேற்கும் நிகழ்வுக் கூட்டம் ஒன்று உடப்பு இந்து கலாச்சார மண்டபத்தில் நேற்று (2)இடம்பெற்றது.

இதற்கு இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை.கந்தசாமி தலைமை தாங்கினார்.

இதன்போது, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் உரையாற்றும் போது, இந்தக் கிராமத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை எமது அநுர குமார திஸாநாயக்க அரசு முன்னெடுக்கும்.

கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் பல உதவிகளையும் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த ஊரில் குறைபாடுகள் ஏதும் இருந்தால் என்னிடம் வந்து எந்த நேரமும் தொடர்பு கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் மீன்பிடி சங்கத் தலைவர்களால் மகஜர்களும் அமைச்சரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டன.

# வடக்குக் கிழக்கில் நிரந்தர அமைதி, நீதி நிலைநாட்டுமாறு மோடியிடம் கோரிக்கை!

## ஆஸ்திரேலியா, அமெரிக்க தமிழ் அமைப்புகள் விடுப்பு!!

**ஐங்கரன் விக்னேஸ்வரா.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் எதிர்வரும் ஏப்ரல் 4-6, 2025 நடைபெறவுள்ளது. இவ்வேளையில் வடகிழக்கு தாயகத்தில் நிரந்தர அமைதியை, நீதியை நிலைநாட்ட இந்திய பிரதமர் மோடியிடம் ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸும், அமெரிக்க தமிழ் செயல் அமைப்பும் இணைந்து (Australian Tamil Congress - ATC & USA Tamil Action Group -USTAG) கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையில்,

ஈழத் தமிழர்களும், உலகளாவிய புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், ஏப்ரல் 4 இல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இலங்கை நாட்டின் எரிசக்தித் துறையில் முக்கிய வளர்ச்சித் திட்டங்களில் ஒன்றை நடைமுறைப்படுத்த தமிழர் தாயக நகரமாகிய திருகோணமலைக்கு இந்திய பிரதமர் வருகை தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பிரதமரின் வருகை தமிழ் மக்களுக்கு ஆறுதல் மரியாதை அளிக்கும் அதே வேளையில், துணைக்கண்ட பாதுகாப்பு உள்ளிட்ட பெரிய திட்டங்களைத் தொடங்குவதன் மூலமும் வெற்றியை எதிர் நோக்குகிறோம்.

குறிப்பாக தமிழ் மக்கள் நிகழ்காலம் மற்றும் கடந்த காலத்தின் சுமைகளைத் தாங்கும் சிக்கலான சூழ்நிலையில் உள்ளார்கள். இதை நாங்கள் பிரதமருக்கும் இந்தியாவின் தார்மீக தலையீட்டுக்கும் கொண்டுவர விரும்புகிறோம்.

தற்போதைய நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலைகள் நாடு தழுவிய ரீதியில் இருந்தபோதிலும், வடக்குக் கிழக்கு தமிழர் தாயக மக்கள் தொடர்ந்து நில அபகரிப்பு, புத்தமதமயமாக்கல் மற்றும் இராணுவ மயமாக்கல் போன்ற மிகப்பெரிய நெருக்கடியில் உள்ளனர். இது தமிழ் மக்களின் எதிர்கால வளர்ச்சியை முழுமையாக முடக்குகிறது.

போர் முடிவடைந்து மே 2009 இற்குப் பின்னர், கடந்த 16 ஆண்டுகளில் இராணுவத்தின் கடுமையான கட்டுப்பாடு மற்றும் செல்வாக்கு, தமிழ் மக்களின் பொருளாதார, கல்வி, சிவில் மற்றும் சமூக நடவடிக்கைகளில் ராணுவத்தின் ஆதிக்கம் பரவுவதற்கு வழிவகுத்து வருகிறது.

மேலும் தமிழ் இனப்படுகொலையின் நினைவு கூரல்களை மிருகத்தனமாக ஸ்ரீலங்கா அரசு அடக்கி ஒடுக்கி வருகிறது. ஆயினும் அனைத்துத் தடைகளையும் மீறி வடக்குக் கிழக்கில் 14 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விழிப்புணர்வு மற்றும் உண்ணாவிரத போராட்டம் மூலம் மக்கள் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

இந்திய பிரதமர் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னதாக, உண்மை, பொறுப்புக் கூறல், நீதி மற்றும் இழப்பீடுகள் தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் (OSLAP) இலங்கை பொறுப்புக்கூறல் அலுவலகம் (Office of Sri Lanka Accountability Project - OSLAP) தன்னறிக்கையை வெளியிட்டுள்ளது.

OSLAP ஆதாரக் களஞ்சியத்தில், இதுவரை 530 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட 101,000 இற்கும் மேற்பட்ட மனித உரிமை மீறல் ஆதார தரவுகள் உள்ளன. இதில் 300இற்கும் மேற்பட்ட சாட்சிகள் மற்றும் 230 அமைப்புகளின் பங்களிப்புகள் அடங்கும்.

இந்த ஆதாரங்கள் தமிழ் இனப்படுகொலையை மட்டுமல்ல, ஜனதா விமுக்தி பெரமுனா (JVP) படு கொலைகள், எண்ணற்ற பத்திரிகையாளர்கள் மற்றும்




ஆர்வலர்கள் காணாமல் போனது, அத்துடன் தெற்கு அரசியலில் சுழலும் சமீபத்திய பட்டலந்த சித்திரவதை மற்றும் காணாமல் போன சர்ச்சைகளையும் உள்ளடக்கியது.

கடந்த பல தசாப்தங்களாக முழு நாட்டையும் பாதித்துள்ள கொடூரமான மனித உரிமை மீறல்களுக்கு உண்மையான பொறுப்புக் கூறலுக்குத் தேவையான அனைத்து ஆதாரங்களும் இப்போது கிடைக்கின்றன.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி (NPP/JVP) அரசிடம் உண்மை, பொறுப்புக் கூறல், நீதி மற்றும் இழப்பீடுகளுக்கான OSLAP இன் அனைத்து புறநிலை மற்றும் பாரபட்சமற்ற ஆதாரங்களையும் கொண்டுள்ளது. அதை இதுவரை வெளிப்படுத்த முயலவில்லை.

பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான திருகோணமலையில் பொருளாதார மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்களைத் தொடங்க இந்தியாவை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இதில் உள்ளூர் தமிழ் மக்களுக்குப் பயனளிக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பது வரலாற்று ரீதியாக ஒதுக்கப்பட்ட சமூகத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பிராந்தியத்தில் இந்தியாவின் மூலோபாய மற்றும் பொருளாதார நலன்களையும் வலுப்படுத்தும் என நாம் நம்புகிறோம்.

மேலும், இந்திய திருகோணமலை மாவட்ட திட்டங்களில் பணிபுரிய திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாட்டு முகாம்களில் உள்ள அகதிகளை மீண்டும் குடியமர்த்துவது இந்தியாவுக்குப் பல வழிகளில் மூலோபாய ரீதியாக நன்மை பயக்கும்.

இது ஒரே அடியில் பல இலக்குகளை அடையும். வளர்ச்சி மற்றும் ஸ்திரத் தன்மையை வளர்ப்பதன் மூலம், இந்தியா தனது நீண்டகால பிராந்திய இலக்குகளுடன் இணைந்த நம்பகமான மற்றும் திறமையான பணியாளர்களை உருவாக்க முடியும்.

தமிழ் மக்களுக்கும் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் அவர்கள் விரும்பும் அனைத்துக்கும் மேலாக உண்மை, பொறுப்புக்கூறல், நீதி மற்றும் இழப்பீடுகள் ஆகியவற்றுக்காக இந்தியாவின் உறுதிப்பாட்டை மேன்மைதங்கிய பிரதமர் செயல்படுத்துவார் என்பது எங்கள் தீவிர நம்பிக்கையாகும் என்று ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸும், அமெரிக்க தமிழ் செயல் அமைப்பும் தெரிவித்துள்ளன.



# உலகத் தலைவர்கள் அனைவரிடமும் பேசக்கூடிய ஒரே தலைவர் மோடி; சிலி ஜனாதிபதி புகழாரம்

ஜனாதிபதி ட்ரம்ப், புடின், ஜெலன்ஸ்கி என உலகத் தலைவர்கள் அனைவரிடமும் பேசக்கூடிய ஒரே தலைவர் பிரதமர் மோடி என சிலி ஜனாதிபதி கேப்ரியல் போரிக் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்தியா – சிலி இடையே தூதரக உறவுகள் ஏற்பட்டு 75 ஆண்டுகள் ஆகிறது. இதை முன்னிட்டு சிலி ஜனாதிபதி கேப்ரியல் போரிக் ஃபான்ட் 5 நாள்கள் பயணமாக கடந்த 1 ஆம் திகதி இந்தியா சென்றார். டில்லி, ஆக்ரா, மும்பை, பெங்களூர் ஆகிய இடங்களுக்கு அவர் செல்கிறார். டில்லியில் உள்ள குடியரசு தின மாளிகையில் அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கேப்ரியல் போரிக் பேசுகையில்,

“பிரதமர் மோடிக்கு தற்போது வித்தியாசமான அந்தஸ்து உள்ளது. உலகில் உள்ள எந்த தலைவர்களுடனும் அவரால் பேச முடியும். ஜனாதிபதிகள் புடின், ட்ரம்ப், ஜெலன்ஸ்கி, ஐரோப்பிய யூனியன், லத்தின் அமெரிக்கா, ஈரான் உட்பட பல நாடுகளின் தலைவர்களுடன் அவரால் பேச முடியும். மற்ற தலைவர்கள் செய்ய முடியாததை பிரதமர் மோடியால் செய்ய முடியும். தற்போது, உலக அரசியல் அரங்கில் அவர் முக்கிய பங்காற்றுகிறார்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகிறது. ஏழ்மை, சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு எதிராக இந்தியா பேராடுகிறது. உலகில் அமைதியை ஏற்படுத்துவதில் இந்தியா உறுதியுடன் உள்ளது.

உலகில் உள்ள அனைத்து நாடுகளுடனும் சிலி தொடர்பில் உள்ளது. நாங்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டை சார்ந்திருப்பதில்லை. சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இந்தியா, லத்தின் அமெரிக்கா, ஆசியா பசபிக், ஜப்பான், அவுஸ்திரேலியா என அனைத்து நாடுகளுடன் நாங்கள் இணைந்து பணியாற்றுகிறோம். இந்தியாவுடன் உறவை மேம்படுத்துவதில் நாங்கள் முக்கிய முடிவுகளை எடுத்துள்ளோம். இந்தியா – சிலி இடையே ஏற்கெனவே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.” என்றார்.







# சென்னையில் கார்ல் மார்க்ஸூக்கு சிலை; சட்டப்பேரவையில் முதல்வர் அறிவிப்பு

சென்னையில் கார்ல் மார்க்ஸ்'க்கு சிலை அமைக்கப்படும் என்றும் பி.கே. மூக்கையா தேவரை சிறப்பிக்கும் வகையில் அவருக்கு உசிலம்பட்டியில் மணி மண்டபம் அமைக்கப்படும் எனவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப் பேரவையில் இன்று அறிவித்துள்ளார்.

சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன் கீழ் இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டு முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"உலக மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களைப் பெருமைப்படுத்திட, போற்றிட இந்த திராவிட மாதிரி அரசு விரும்புகிறது.

"உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள்' என்ற பிரகடனத்தை, உலகத் தொழிலாளர்கள் அனைவருக்குமான ஒரே முழக்கமாக பொதுவுடைமைத் தத்துவத்தை வடித்துத் தந்த புரட்சியாளர் கார்ல் மார்க்ஸ் இழப்பதற்கென்று எதுவுமில்லை – பெறுவதற்கோ பொன்னுலகு இருக்கிறது என்ற நம்பிக்கை விதைகளை விதைத்தவர்! அறிவுலகத் தொலைநோக்குச் சிந்தனையாளர்.

வரலாற்றில் பலரும் பிறக்கிறார்கள் பலர் வரலாற்றுக்குத் தொண்டாற்றி இருக்கிறார்கள். ஆனால், வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைத்தவர்கள் சிலர் தான். அந்த ஒரு சிலரில் தலைமகனாகப் போற்றப்படுபவர் கார்ல் மார்க்ஸ்.

உலகப் புரட்சிகளுக்கும், இந்த உலகம் இதுவரை அடைந்துள்ள பல்வேறு மாற்றங்களுக்கும் அடித்தளம் அமைத்தது அவரது சிந்தனைகள்தான். அப்படிப்பட்ட 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற சிந்தனையோடுதான், அவரது நினைவு நாளான கடந்த மார்ச் 14 ஆம் நாள், நம்முடைய நிதிநிலை அறிக்கையை இந்தப் பேரவையில் தாக்கல் செய்தோம்

இந்தியாவைப் பற்றி யாரும் எழுதாத காலத்தில், மிகச்சரியாக இந்தியாவைப் பற்றி எழுதியவர் அவர்தான். 'தீர்க்க முடியாத முரண்பாடுகள் உள்ள பல்வேறு இனங்கள், குலமரபுகள், சாதிகள், சமயக் கோட்பாடுகள், அரசுகள் ஆகியவைகளை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்டிருக்கிற புவியியல் ஒற்றுமையைத்தான் இந்தியா என்று அழைக்கிறோம். இந்தியாவின் கடந்த காலத்தில் அரசியல் எவ்வாறு மாறிய போதிலும் சமுதாய நிலை மாறவில்லை. எது எப்படி இருந்தாலும் சரி, அந்த மகத்தான, கவர்ச்சிகரமான தேசம் ஒரு காலத்தில் மறுமலர்ச்சி அடைவார்கள் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம்' என்று எழுதியவர் கார்ல் மார்க்ஸ்.

அதனால்தான் மார்க்ஸ்–எங்கெல்ஸ் எழுதிய கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதன்முதலாகத் தமிழில் மொழிபெயர்த்து 1931 ஆம் ஆண்டே வெளியிட்டார் தந்தை பெரியார். அத்தகைய மாமேதை மார்க்ஸ் அவர்களது உருவச் சிலை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமையடைகிறேன்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொழிற்சங்க இயக்கம் கோலோச்சிய இந்த சென்னை மாநகரில் அந்த மாமேதையின் சிலை அமைவது பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

அகில இந்திய பார்வர்டு பிளாக் தலைவரும் உறங்காப்புலி என்று போற்றப்பட்டவருமான பி.கே.மூக்கையாதேவருக்கு நாளை 103 ஆவது பிறந்தநாள்!

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 1923 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4–ஆம் நாள் அவருடைய பிறந்த நாள். இளம் வயதில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நம்பிக்கையைப் பெற்று பார்வர்டு பிளாக் கட்சியில் இணைந்தார்.

சுதந்திர இந்தியாவின் முதல் தேர்தலில் 1952 ஆம் ஆண்டு பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். அதன்பிறகு 1957, 1962, 1967, 1971, 1977 ஆம் ஆண்டுகள் தேர்தல்களில் தொடர்ந்து உசிலம்பட்டி தொகுதியில் வெற்றி வாகை சூடியவர் மூக்கையா தேவர். 1971 ஆம் ஆண்டு இராமநாதபுரம் நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வென்றவர். ஒரே தொகுதியில் தொடர்ச்சியாக வென்று மக்கள் நாயகனாக வளர்ந்தவர் அவர்.

1967 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடைபெற்றபோது பேரறிஞர் பெருந்தகை அண்ணாவுக்கு தோள் கொடுத்தவர் பி.கே.மூக்கையாத் தேவர். அப்போது இந்தப் பேரவையில் தற்காலிகப் பேரவைத் தலைவராக இருந்த அவர்தான் அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கச்சதீவு ஒப்பந்தத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முழங்கியவரும் அவர்தான். தேவர் சமுதாய மக்களுக்காக கல்வி நிறுவனங்கள் உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் கோரிக்கை வைத்தவரும் அவர். அதனால்தான் கமுதி, உசிலம்பட்டி, மேலநீலிதநல்லூர் ஆகிய இடங்களில் அரசு கல்லூரிகள் கழக ஆட்சியில் அப்போது அமைக்கப்பட்டன.

"நியாயத்துக்கு ஒரு மூக்கையா' என்று பேரறிஞர் அண்ணாவால் போற்றப்பட்ட பி.கே.மூக்கையாதேவரை சிறப்பிக்கும் வகையில், உசிலம்பட்டியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவிப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்." என்றார்.





# காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 80 பேர் உயிரிழப்பு

ாசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் சிறுவர்கள் உள்ளிட்ட 80 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் இரவு முழுவதும் தொடர்ந்து வரும் நிலையில் இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், காசா பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்பட்டு வரும் வைத்தியசாலை மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

எவ்வித முன்னறிவிப்புகளும் இன்றி இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே காசா மீதான இஸ்ரேலின் இதுவரையான தாக்குதல்களில் 50,423 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 114,638 பேர் காயமடைந்துள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களுக்கும் 10 வீத வரி

## டொனால்ட் ட்ரம்ப் அதிரடித் தீர்மானம்




அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருள்களுக்கும் 10 வீத தீர்வை வரியை விதிப்பதற்கு அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.

இந்த புதிய வரிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 34 வீத வரியும் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது 20 வீத வரியும் ஜப்பான் பொருட்களுக்கு 24 வீதமும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதும் 26 வீத வரியும் தென் கொரிய பொருள்களுக்கு 25 வீத வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ட்ரம்ப், பல நாடுகளின் பொருள்களுக்கு மிக அதிக வரிகளுடன், பணவீக்கத்தை அதிகரித்து அமெரிக்க மற்றும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் அச்சுறுத்தலான உலகளாவிய வர்த்தகப் போரை அதிக அளவில் தொடங்கியுள்ளார்.

எதிர்பாராத விதமாக அதிக வரி விகிதங்களுடன் தங்களை இணைத்துக் கொண்ட பல நீண்டகால அமெரிக்க நட்பு நாடுகளிடமிருந்து குழப்பமான கண்டனத்தைப் பெற்ற இந்த கடுமையான வரிகள், உலகின் மிகப்பெரிய நுகர்வோர் பொருளாதாரத்தைச் சுற்றி புதிய தடைகளை எழுப்புவதாக உறுதியளிக்கின்றன.

இது உலகளாவிய ஒழுங்கை வடிவமைத்த பல தசாப்த கால வர்த்தக தாராளமயமாக்கலை மாற்றியமைக்கிறது.

இதனால், வர்த்தக பங்காளிகள் தாங்களாகவே எதிர் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது துவிச்சக்கர வண்டிகள் முதல் வைன் வரை அனைத்திற்கும் வியத்தகு முறையில் அதிக விலைகளுக்கு வழிவகுக்கும்.

இந்த வரி விதிப்பினை விமர்சித்துள்ள அமெரிக்க திறைசேரியின் தலைவர் ஸ்காட் பெசென்ட், ஏனைய நாடுகளை பழிவாங்க வேண்டாம் என்று வலியுறுத்தினார்.

இது குறித்து சி.என்.என். செய்திச் சேவையிடம் பேசிய அவர்,

“இது எங்கு செல்கிறது என்று பார்ப்போம், ஏனென்றால் நீங்கள் (ட்ரம்ப்) பழிவாங்கினால், அதுதான் நமக்கும் விலை உயர்வுக்கு வழிவகுக்கும்,எதையும் அவசரமாகச் செய்வது புத்திசாலித்தனம் அல்ல,” என்று கூறினார்.

பங்குச் சந்தைகள் கட்டணங்களுக்கு எவ்வாறு எதிர்வினையாற்றும் என்று என்று கேட்கப்பட்டது, அதற்கு அவர் “எனக்குத் தெரியாது” என்று பதிலளித்தார்.

இந்த அறிவிப்புக்குப் பின்னர் பங்குச் சந்தைகள் சரிந்தன.

இன்று வியாழக்கிழமை ஆரம்ப வர்த்தகத்தில் ஜப்பானின் நிக்கேய் எட்டு மாதங்களில் இல்லாத அளவுக்குக் குறைந்த அளவை எட்டியது.

அதே நேரத்தில், அதிகரித்து வரும் வர்த்தகப் போர் குறித்த நிச்சயமற்ற தன்மையால் பல வாரங்களாக நிலையற்ற வர்த்தகத்தைத் தொடர்ந்து அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பங்குச் சந்தைகள் கடுமையாக சரிந்தன.

பெப்ரவரி நடுப்பகுதியில் இருந்து அமெரிக்க பங்குகள் கிட்டத்தட்ட 5 டிரில்லியன் டொலர் மதிப்பை அழித்துவிட்டன.

கனடா முரசு
பக்கங்கள் - 3
வியாழக்கிழமை 03/04/2025

## அமெரிக்கா வரிகளை நீக்கினால் கனடாவும் வரிகளை நீக்கத் தயார்




C2 ▶



# கனடாவின் பொருள்களுக்கான வரியை ரத்து செய்ய வேண்டும்

## குடியரசு கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தல்

கனடாவில்இருந்துஇறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்படும் 25 சதவீத வரியை ரத்து செய்ய கோரி ஜனநாயக கட்சியினருடன் இணைந்து குடியரசு கட்சி செனட்டர்களும் குரல் கொடுத்துள்ளனர்.

அண்டை நாடுகளான கனடா மற்றும் மெக்சிக்கோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 சதவீத வரியை விதிக்கும் உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பிறப்பித்தார். இந்த உத்தரவு அமெரிக்காவில் விலைவாசி உயர்வை ஏற்படுத்துவதுடன், வளர்ச்சியை பாதிக்கும் என எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

C2 ▶

# ட்ரம்பின் வரிகளிலிருந்து விலக்கப்பட்டது கனடா

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலக நாடுகள் பலவற்றின் மீதும் பரஸ்பர வரிகளுக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாட்டின் மீதும் அவர் விதித்துள்ள பகுதியளவு பரஸ்பர வரிகளை பற்றி விவரிக்கையில் ஒரு சில நாடுகள் அதில் விடுபட்டிருந்ததை கவனிக்க முடிந்தது.

கனடா, மெக்சிகோ ஆகியவற்றை தாண்டி, ட்ரம்பின் பரஸ்பர கட்டணப் பட்டியலில் இடம்பெறாத நாடுகளில் ரஷ்யாவும், வட கொரியாவும் அடங்கும்.

அதே சமயம் கனடாவும், மெக்சிக்கோவும் டொனால்ட் ட்ரம்பின் ஏப்ரல் 2 ஆம் திகதி பரஸ்பர வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், அவை எந்த நடவடிக்கையையும் எதிர்கொள்ள வேண்டியதில்லை என்று அர்த்தமல்ல.




கனேடிய மற்றும் மெக்சிகன் பொருள்களுக்கான தற்போதைய வரிகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன, மேலும் வாகன தயாரிப்புகள் மீதான புதிய வரிகள் வியாழக்கிழமை அமலுக்கு வரும்.

இந்த நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முன்பு 25 சதவீத ஃபெண்டானில் தொடர்பான வரிகளையும், கனேடிய எரிசக்தி மற்றும் பொட்டா/க்கு 10 சதவீதத்தையும் ட்ரம்ப் விதித்திருந்தார்.




# அமெரிக்கா வரிகளை நீக்கினால் கனடாவும் வரிகளை நீக்கத் தயார்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் கனடா மீதான வரிகளை கைவிட்டால், கனடாவும் அமெரிக்கா மீதான வரிகளை நீக்க தயாராக இருக்கிறது என்று ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வரிகளுக்கு பதிலடியாக கனடா சுமார் 60 பில்லியன் டொலர் பெறுமதியான வரிகளை விதித்துள்ளது.

நாங்கள் நாளையே இந்த வரிகளை நீக்க தயாராக இருக்கிறோம், ஆனால் அவர் (ட்ரம்ப்) முதலில் தன்னுடைய வரிகளை அகற்ற வேண்டும் என போர்ட் கூறினார்.

கடந்த மாதம், அமெரிக்கா உலகளாவிய அளவில் உருக்கு மற்றும் அலுமினிய இறக்குமதிக்கு 25 வீத வரி விதித்தது.

இதேவேளை, கனடா, 155 பில்லியன் டொலர் மதிப்புள்ள அமெரிக்க பொருள்களுக்கு புதிய வரிகளை அறிவிக்க தயாராக உள்ளது.

ட்ரம்பின் வரி விதிப்பினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை அமெரிக்கர்கள் இன்னமும் உணரவில்லை என போர்ட் தெரிவித்துள்ளார்.

# வீட்டு வாடகை மோசடியில் ஈடுபட்ட பெண்ணை தேடுகின்றனர் பொலிஸார்

வீட்டு வாடகை மோசடியில் ஈடுபட்ட ரொறொண்டோவைச் சேர்ந்த பெண் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றார்.

வாடகை வீடுகளைத் தேடிய சுமார் 30 பேர் ஏமாற்றப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பெண் பலரை ஏமாற்றி பணம் திரட்டியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்செயலுடன் தொடர்புடைய 50 வயது பெண்ணை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் 2024 ஜனவரி 1 முதல் ஓகஸ்ட் 30 வரை நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

சந்தேகநபர், செண்டினல் ரோடு மற்றும் பின்ச் அவென்யு வெஸ்ட் பகுதியில் உள்ள ஒரு அடையாளம்



தெரியாத குடியிருப்பு கட்டடத்தின் மேலாளராக கடமையாற்றியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த காலக்கட்டத்தில், மேற்படி பெண் 28 பேர் வாடகை வீடுகளை உறுதி செய்ய விரும்பிய நிலையில், அவர்களிடமிருந்து பணமாகவும், மின்னணு பணப்பரிமாற்றமாகவும் பணம் பெற்றுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் தகவலின் படி, மேற்படி பெண் வாடகையாளர்கள் குடியேறும் திகதிக்கு முன்னதாகவே தனது பதவியிலிருந்து விலகி, கட்டடத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

இதனால், எந்தவொரு வாடகை வீட்டும் கிடைக்காமல், பாதிக்கப்பட்டவர்கள் மொத்தமாக 54,000 டொலர்களை இழந்துள்ளனர்.

டொரொண்டோவைச் சேர்ந்த 50 வயதான லைஞாலி அசுன்சியன் என்ற பெண்ணை பொலிஸார் தேடி வருகின்றனர்.

## கனடாவின் பொருள்களுக்கான

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்படும் 25 சதவீத வரியை ரத்து செய்ய கோரி ஜனநாயக கட்சியினருடன் இணைந்து குடியரசு கட்சி செனட்டர்களும் குரல் கொடுத்துள்ளனர்.

கென்டக்கி, மைனே, அலாஸ்கா உள்ளிட்ட 4 மாகாணங்களை சேர்ந்த குடியரசுக் கட்சி செனட்டர்களும் அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்துள்ளனர். வரி உயர்வால் அமெரிக்க மக்கள் எதிர்மறையான தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# டொரொண்டோவில் கனமழை எச்சரிக்கை

டொரொண்டோவிற்கான மழை எச்சரிக்கையை கனேடிய வானிலை நிலையம் வெளியிட்டுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் 50 மில்லி மீற்றர் வரை மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு ஒன்டாரியோவில் மழை தொடங்கி, கோல்டன் ஹார்ஸ்ஷ் பகுதிக்கு நகரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை காரணமாக சில பகுதிகளில் 50 மில்லி மீற்றரைத் தாண்டிய மழை பதிவாகலாம் எனவும் வானிலை துறையின் எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சிறிய காலத்திற்கு உறைபனி மழை ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுஞ்சாலைகள், தெருக்கள், நடைபாதைகள், மற்றும் வாகன தரிப்பிடங்கள் பனியாகி, வழுக்கலாக மாறக்கூடும்," எனவும், யார்க் மற்றும் டர்ஹாம் பகுதிகள் உறைபனி மழை எச்சரிக்கையின் கீழ் உள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

தொடர் மோசமான வானிலை காரணமாக, டொரோண்டோ பெரும்பாக பகுதி வடக்கில் உள்ள சில பகுதிகளில் பாடசாலை பஸ்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

